Australian Government
Civil Aviation Safety Authority

KNOW YOUR DRONE

# ஆளில்லா விமானம் (DRONE) பற்றிய முக்கியப் பாதுகாப்புத் தகவல்கள்




நீங்கள் உங்கள் ஆளில்லா விமானத்தைத் தரை மட்டத்திலிருந்து 120 மீட்டருக்கு மேல் கட்டாயம் பறக்கவிடக் கூடாது.




நீங்கள் உங்கள் ஆளில்லா விமானத்தைக் கட்டாயம் மற்றவர்களிடமிருந்து குறைந்த பட்சம் 30 மீட்டர் தொலைவில் வைத்திருக்க வேண்டும், அத்துடன் அதை ஒரு நபரின் மேல் பறக்கவிடக் கூடாது.



நீங்கள் ஒரு நேரத்தில் ஒரே ஒரு ஆளில்லா விமானத்தை மட்டுமே பறக்கவிட வேண்டும்.



பகல் நேரத்தில் மட்டுமே பறக்கவிட வேண்டும்.



மக்கள் தொகை அதிகம் உள்ள பகுதியில் நீங்கள் கட்டாயம் பறக்கவிடக் கூடாது. இதில் கடற்கரைகள், பூங்காக்கள், நிகழ்வுகள் அல்லது விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் விளையாட்டு மைதானங்கள் போன்றவை அடங்கும்.



மற்றொரு ஆகாயவிமானம், மனிதர்கள் அல்லது உடைமை போன்றவற்றுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் நீங்கள் உங்கள் ஆளில்லா விமானத்தைக் கட்டாயம் பறக்கவிடக் கூடாது. மற்றவர்களின் தனியுரிமையை மதிக்க வேண்டும்.



உங்கள் ஆளில்லா விமானத்தை உங்கள் கண்பார்வை எல்லைக் கோட்டுக்குள் இருக்குமாறு வைத்திருக்கவும். இதன் பொருள் என்னவென்றால் நீங்கள் அதை எப்போதும் உங்கள் கண்களால் பார்க்க முடியும் (கருவி, திரை அல்லது கண்ணாடி வழியாக அல்ல). மேகம், மூடுபனி அல்லது புகை ஊடாகப் பறக்கவிட வேண்டாம்.



உங்கள் ஆளில்லா விமானத்தைப் பொதுப் பாதுகாப்பைப் பாதிக்கும் பகுதிகள் அல்லது அவசரகாலச் செயல்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் இடங்கள் இவற்றுக்கு மேலாகவோ அல்லது அருகிலோ கட்டாயம் பறக்கவிடக் கூடாது. இதில் ஆம்புலன்ஸ், காவல் பணி, தேடல் மற்றும் மீட்பு அல்லது தீயணைப்பு முயற்சிகள் அடங்கும்.




உங்கள் ஆளில்லா விமானம் 250 கிராமுக்கு மேல் எடையுள்ளதாக இருந்தால், கட்டுப்பாட்டு விமான நிலையத்திலிருந்து (கட்டுப்பாட்டுக் கோபுரங்களைக் கொண்ட விமான நிலையங்கள்) 5.5 கிமீ தொலைவுக்குள் நீங்கள் கட்டாயம் பறக்கவிடக் கூடாது. அது 250 கிராம் அல்லது அதற்கும் குறைவாக இருந்தால், நீங்கள் 5.5 கிமி தொலைவுக்குள் 45 மீ உயரம் வரை பறக்கவிடலாம். ஆனால் விமான நிலைய எல்லைக்கு வெளியே இருக்க வேண்டும், மற்ற விமானங்களுக்கு அபாயத்தை உருவாக்கக் கூடாது. எவ்வளவு எடை இருப்பினும், ஓடுபாதையின் கீழிறங்கும் மற்றும் புறப்படும் பாதைகளில் இருந்து விலகியிருக்க வேண்டும்.




கட்டுப்பாட்டு கோபுரங்கள் இல்லாத சிறிய விமான நிலையங்களுக்கு அருகில், நீங்கள் 5.5 கிமீ தொலைவுக்குள் உங்கள் ஆளில்லா விமானத்தைப் பறக்க விடலாம். அருகிலுள்ள ஆளுள்ள ஆகாயவிமானம் பற்றி உங்களுக்குத் தெரியவந்தால், அங்கிருந்து நகர்ந்து உங்கள் ஆளில்லா விமானத்தை விரைவாகவும் பாதுகாப்பாகவும் தரையிறக்கவும்.




நீங்கள் ஹெலிகாப்டர் தரையிறங்கும் தளத்திலிருந்து 1.4 கிமீ தொலைவுக்குள் இருந்து, அருகிலுள்ள ஹெலிகாப்டரின் புறப்பாடு அல்லது தரையிறங்கல் பற்றி உங்களுக்குத் தெரியவந்தால், நீங்கள் உங்கள் ஆளில்லா விமானத்தை அப்பால் நகர்த்திப் பாதுகாப்பாகத் தரையிறக்க வேண்டும்.



வேலைக்காக (வணிக ரீதியாக) உங்கள் ஆளில்லா விமானத்தைப் பறக்கவிட்டால், கூடுதல் விதிகள் பொருந்தும். நீங்கள் உங்கள் ஆளில்லா விமானத்தைக் கட்டாயம் பதிவு செய்து, உரிமம் அல்லது அங்கீகாரம் பெற வேண்டும். நீங்கள் வேடிக்கைக்காக மட்டுமே பறக்கவிடும் பட்சத்தில், பதிவு அல்லது அங்கீகாரம் தேவையில்லை.

**KNOWYOURDRONE.GOV.AU**

2405.4919_Tamil